# நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரண கூட்டம்

2026 ஆம் ஆண்டு மே மாதம் 22.05.2026 நாள் அன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரண கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள்: 22.05.2026

**நகர் மன்ற தலைவர் (பொறுப்பு)**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி**
**நகராட்சி.**

---

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் குத்தகை இனங்களின் வாடகைக்கு விடப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கு 31.03.2026ல் 3 ஆண்டு காலம் குத்தகை முடிவடைந்துள்ளது. அரசாணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2025ன் படி 3 ஆண்டு குத்தகை முடிவடையும் இனங்களுக்கு குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு 9 ஆண்டுகளுக்கான குத்தகையினை புதுப்பித்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது, கீழ்க்கண்ட கடைகளுக்கு 3 ஆண்டு குத்தகை முடிவடைந்துள்ளது.

மேற்படி கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர்கள் குத்தகையினை புதுப்பித்து வழங்க கோரி மனு அளித்துள்ளனர். மேலும், புதுப்பித்தல் கட்டணமும் குத்தகையினை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.02 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.2**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 2022-2023 ஆம் ஆண்டில் DBC பணியாளர்களை கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யப்பட்ட விபரப்படி 17954 குடியிருப்புகள் உள்ளன. இதற்கு PLAN – 300 திட்டத்தின் படி 60 பணியாளர்கள் தேவை.

மேற்படி பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் DBC மஸ்தூர் பணியாளர்களுக்கான மாவட்ட ஆட்சியரின் ஊதிய அளவு கோலின்படி ஒரு நபருக்கு ரூ.599/- வீதம் இதர செலவினங்களுடன் சேர்த்து ஆகஸ்ட் 2026 முதல் செப்டம்பர் 2026 வரை உள்ள காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.25.00/- இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மானம் எண்.03 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்:166 MAWS Dept நாள்.23.11.2016ன்படி பள்ளி வளாகங்கள், வகுப்பறைகள், மாணவ மாணவியர் சாப்பிடும் பகுதிகளை தூய்மைப்படுத்திடவும், கழிவுநீர் கால்வாய் தூய்மைப்படுத்தும் பணி, வாரம் ஒரு முறை ஒட்டடை அடிக்கும் பணி, கழிவறைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் தூய்மை பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சி தூய்மை பணியாளர் பற்றாக்குறை உள்ளதால் தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அவர்களின் தினக் கூலி நிர்ணயம் ரூபாய்.578/- மற்றும் இதர செலவினங்களையும் சேர்த்து ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிகாட்டுதலின்படி 15 பணியாளர்களை 2026-2027-ம் ஆண்டிற்கு ஜுலை 2026 முதல் அக்டோபர் 2026 வரை பணியமர்த்திகொள்ள ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.80/-இலட்சத்தை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.04– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.4**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சியில் ஆணையாளர் ஓட்டுநர்–2 நபர், தலைவர் ஓட்டுநர்–2 நபர்கள், நகராட்சி அலுவலக இரவு காவலர்–1 நபர் மற்றும் தூய்மை கழிவறை பணியாளர் –1 நபர் ஆக மொத்த பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு பணி (Out Sourcing) (01.07.2026 முதல் 30.09.2026 வரை) பணி மேற்கொள்ள அதற்குண்டான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**

**தீர்மானம் எண்.05 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.5**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி நகராட்சியில் ஆணையாளர் பூங்கா பராமரிப்பிற்கு பாதுகாவலர்–7 நபர்கள், தோட்டக்காரர் –1 நபர் மற்றும் கழிவறை தூய்மை பணியாளர் –1 நபர் ஆக மொத்த பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு பணி (Out Sourcing) (01.07.2026 முதல் 30.09.2026 வரை) பணி மேற்கொள்ள அதற்குண்டான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.06 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.6**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி குடிநீர் விநியோக பணிகளுக்கும் பயன்பாட்டிற்கு பெருமட்டுநல்லூர் தலைமை நீர் நிலையத்திற்கு – 3 நபர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் – 4 நபர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் RO Plant இயக்குபவர் – 3 நபர்கள், மற்றும் கணிணி இயக்குபவர்கள் – 4 நபர்கள் ஆக மொத்த பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு பணி (Out Sourcing) (01.07.2026 முதல் 30.09.2026 வரை)ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அதற்குண்டான செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.07 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.7**

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன் கீழ் மற்றும் 6வது மாநில நிதி குழு ஆணையம் 2022–2023 கீழ் புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. மேலும் புதிய நகராட்சி அலுவல கட்டிட திறப்பு விழாவிற்கான விளம்பர கட்டணத்தின் உத்தேச செலவினத்

தொகை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2026–27–ன் கீழ் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2310/2025/இ1**

**தீர்மானம் எண்.08 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.8**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மைய கட்டிடத்தில் உள்ள Bio Septic Tank விரைவாக நிரம்பி விடுவதால் கழிவறையை பயன்படுத்த இயலவில்லை. இதனால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் மற்றும் நகர மன்ற உறுப்பினார் கோரிக்கையின்படி பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படியும் இடம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனவே புதியதாக Septic Tank கட்டும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.20/– இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**

**தீர்மானம் எண்.09 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.9**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுத் தெரு மேல்நிலை நீர் தேக்க தொட்டி தரைப்பகுதி குண்டும், குழியுமாகவும் மழைக்காலத்தில் தண்ணீர் தேங்கியும் உள்ளது. சுற்று சுவர் 10 அடி நிலத்திற்கு உடைந்து உள்ளதால் சமூக விரோதிகள் உட்புகுந்து பாதுகாப்பற்ற நிலை உள்ளது மற்றும் குளோரின் அறை முற்றிலும் சேதமடைந்து உள்ளது. நகர மன்ற உறுப்பினார்கள் கோரிக்கையின்படி பொறியாளர் அவர்களின் ஆய்வின் போது வழங்கிய அறிவுரையின் படி மேல்நிலை நீர் தேக்க தொட்டி தரைப்பகுதி சீரமைத்து பேவர் பிளாக் சாலை அமைக்கவும், சுற்று சுவர் சீரமைக்கவும் மற்றும் GI Sheet குளோரின் அறை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.5.80/– இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.10 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.10**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தரைப்பகுதி குடிநீர் வாகனம் வந்து தண்ணீர் பிடிக்க இயலாத நிலையிலும் மிகவும் குண்டும், குழியுமாக உள்ளது மேலும் சுற்று, சுவர் உயரம் குறைவாக உள்ளதால், பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ளது. நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆய்வின் போது வழங்கிய அறிவுரையின் படி இடம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பேவர் பிளாக் தரை அமைத்தல், முள் கம்பி வேலி கொண்டு சுற்றுசுவர் உயர்த்துதல், மெயின் கேட் அமைத்தல், மின் விளக்கு அமைத்தல், வால்வு பிட் (valve pit) உயர்த்தி கவர் ஸ்லேப் (Cover Slab) அமைத்தல், சுற்று சுவர் வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் ரூ.22.50/– இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.11 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.11**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, 17, 18, மற்றும் 19 ஆகிய பகுதியில் இயங்கி வரும் சிறு மின் விசை பம்புகள் (Mini Power Pump) மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் உள்ள 500லிட்டர் HDPE டேங்குகள் சேதமடைந்து உள்ளதால், எனவே 500லிட்டர் HDPE டேங்குகள் மற்றும் இதர பழுது நீக்கல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.80000/– குடிநீர் நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.12 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.12**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்துநிலைய கழிப்பறை மற்றும் மீன் மார்க்கெட்டில் இயங்கிவரும் கட்டண கழிப்பறை ஆகிய பற்றில் பழுதடைந்த GI Sheet மாற்றுதல், மின் விளக்குகள், சரி செய்தல், தண்ணீர் வசதி சரி செய்த போன்ற மராமத்துப் பணிகள் செய்ய பொதுமக்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர் அவர்களில் புகாரின்படி கழிப்பறை ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு, இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.7.00/– இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.13 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.13**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் சட்டமன்ற அறிவிப்புகள் 2022–2023 ன் கீழ் நல்ல நிலையில் கட்டப்பட்டு 04.03.2026 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது பழைய நகராட்சி கட்டிடத்தில் உள்ள கோப்புகள், இருக்கைகள், பீரோக்கள் மற்றும் இதர உபகரணங்கள் புதிய நகராட்சி அலுவலகத்திற்கு இடம் மாற்ற ஆட்கூலி மற்றும் வாகன வாடகை மற்றும் இதர பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.14 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.14**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்கா நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தரைப்பகுதி குண்டும், குழியுமாகவும் புதர் மண்டி குடிநீர் வால்வுகளை இயக்குவதிலும், குளோரின் கலப்பதிலும் சிரமமாக உள்ளது. எனவே நகராட்சி குடிநீர் பணியாளர்கள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி தரைப்பகுதி பேவர் பிளாக் சுற்றுசுவர் வர்ணம் பூசுதல், மின் விளக்கு அமைத்தல் மற்றும் இதர சீரமைப்பு பணிக்கு உத்தேச செலவினம் ரூ.7.00/–

இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.15 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.15**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் தினசரி சுற்றுபுற சுகாதார பணிகளுக்காகவும் பேருந்து நிலையம், மீன் மார்கெட், உழவர் சந்தை மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் பொது சுகாதார பணிகளுக்காகவும், உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகையின் போதும், ஆய்வின் போதும் சுகாதார பணிகள் மேற்கொள்வதற்கும், டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு தூள், பிளீச்சிங் பவுடர், பினாயில் போன்றவை அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதால் பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் கீழ்க்கண்ட கிருமி நாசினிகளை அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் ரூ.5.00 இலட்சம் உத்தேச செலவினத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்திட நகர்மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. 1. நீர்த்த சுண்ணாம்பு தூள் – 10,000 கி.கி
2. 2. பிளீச்சிங் பவுடர் – 5000 கி.கி
3. 3. கருப்பு பினாயில் – 500 லிட்டர்
4. 4. MOP - 10 No’s
5. 5. வெள்ளை பினாயில் – 100 லிட்டர்
6. 6. துடைப்பம் – 100 No’s
7. 7. பிரஷ் – 10 No’s
8. 8. நான்கு பல் முள்ளு கம்பி பிடியுடன் – 20 No’s

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.16 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.16**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 யமுனா நகர் பூங்காவில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி முடிந்துள்ளதை தொடர்ந்து தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி (Sump) கட்டுதல் மற்றும் மின்மோட்டார் பொருத்தப்படாமல் உள்ளதால் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் போதய அளவில் விநியோகம் செய்யப்படாமல் உள்ளது. நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படி பொறியாளர் அவர்கள் ஆய்வினை போது வழங்கிய அறிவுரையின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் அதற்கான மின்மோட்டார் அறை, DI பைப் லைன், மோட்டார் மற்றும் Specials அமைத்தல் ஆகிய பணிகளுக்கு உத்தேச செலவினம் ரூ.38.00/– இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.17 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.17**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 7ல், என்.பி.ஆர் நகரில் நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கிணறு புதர் மண்டி மக்கள் பயன்படுத்த இயலாத நிலையல் உள்ளது. எதிர்வரும் கோடைகாலத்தை குடிநீர் பற்றகுறையை சமாளிக்க இந்தப் பகுதி மக்களுக்கு இந்த கிணற்றை தூர்வாரி, மின் இணைப்பு, மின் மோட்டர் பாதுகாப்பு வலை, பைப்லைன் அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர மன்ற உறுப்பினர் கோரிக்கையின் நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வின் போது வழங்கிய அறிவுடிரையின் படி இடம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.18.50/– இலட்சத்தில் பொது நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2026–2027ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:–777/2026/இ1**
**தீர்மானம் எண்.18 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.20**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 ல் பெரியார் நகர் பகுதியில் குடிநீர் பொது பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.10.00/– குடிநீர் நிதி 2026–2027ன் கீழ் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி வழங்கலாம்.

***ந.க.எண்:–777/2026/இ1***
**தீர்மானம் எண்.21 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.21**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் கீழ்கண்ட பணிகள் பொது நிதி 2025 –2026 ஆம் ஆண்டின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ண பேருந்து நிலைய வளாகத்தில் சுற்றுச்சுவர் கிரில் அமைத்தல். | 14.00 |
| 2. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நகராட்சி நடுநிலைப்பள்ளி–கூடுவாஞ்சேரி பிரதான வளைவு மற்றும் முதல் தலத்தில் உள்ள வகுப்பறை பகுதியில் பாதுகாப்பு கிரில் அமைத்தல். | 4.00 |
| 3. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நகராட்சி தொடக்கப்பள்ளி பிரதான வளைவு மற்றும் முதல் தலத்தில் உள்ள வகுப்பறை பகுதியில் பாதுகாப்பு கிரில் மற்றும் புதியதாக GALVANIZED SHED அமைத்தல். | 7.00 |
| 4. | புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அனைத்து அறைகளிலும் புதிய இணையதள இணைப்பு பொருத்துதல் பணி. | 9.00 |
| 5. | புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கண்காணிப்பு கோமர பொருத்துதல் பணி. | 12.00 |
| 6. | நெல்லிக்குப்பம் சாலையில் உயர்கோபுர மின் விளக்குகளில் ஒளிரும் LED STRIP விளக்குகள் பொருத்தல் பணி. | 2.70 |
| 7. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்திற்கு கணினி ALL IN ONE PC மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்தல். | 16.00 |
| 8. | நகராட்சி நிர்வாக செங்கல்பட்டு மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு 15KVA UPS WITH BATTERIES கொள்முதல் செய்யும் பணி. | 7.00 |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 9. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குப்பட்ட நெல்லிக்குப்பம் சாலையில் உள்ள அறிவுசார் மையத்தில் புத்தகங்கள் கொள்முதல் செய்தல். | 3.85 |
| 10. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட (விடுபட்ட) பகுதிகளில் 120 Watts LED விளக்குகள் மற்றும் 200Watts LED Flood Light கொள்முதல் செய்தல் பணி. | 20.00 |

**அலுவலக குறிப்பு:–**

| | |
|---|---|
| 1. | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2. | மேற்படி பணிகளுக்கான செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**தீர்மானம் எண்.22– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.22**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் பொது நிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.258, நாள்.09.01.2026–ன் படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 12.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் பிள்ளையார் கோயில் தெரு மழைநீர் வடிகால் அமைத்தல். | 24.00 | குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.02% |
| | | | Jayshun Associates | 4.42% | - |
| 2. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் 1வது தெரு மற்றும் 2வது தெரு மழைநீர் வடிகால் அமைத்தல். | 39.00 | குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.03% |
| | | | Jayshun Associates | 3.82% | - |
| 3. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் குறுக்கு தெருக்கள் மழைநீர் வடிகால் அமைத்தல். | 28.00 | SVJ எண்டர்பிரைசஸ் | - | 0.02% |
| | | | J. பிருந்தா | 4.48% | - |
| 4. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் 3வது தெரு மற்றும் 4வது தெரு மழைநீர் வடிகால் அமைத்தல். | 16.00 | SVJ எண்டர்பிரைசஸ் | - | 0.04% |
| | | | J. பிருந்தா | 3.41% | - |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/ 2025/இ1**
**தீர்மானம் எண்.23 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.23**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் பொது நிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். , நாள்.09.01.2026–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 05.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.10–ல் உள்ள மசூதி தெரு மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 24.00 | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | எம்.கே.பாலாஜி | 2.71% | - |
| 2. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நந்திவரம் கிராம பிரதான சாலை (ஜி.எஸ்.டி சாலை முதல் நந்திவரம் தங்கல் வரை) தார் சாலை அமைத்தல். | 39.00 | L.புண்ணியகோட்டி | - | 0.05% |
| | | | இதழினியா எண்டர்பிரைசஸ் | 3.75% | - |
| 3. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் குறுக்கு தெருக்கள் தார் சாலை அமைத்தல். | 28.00 | வி.டி.பி அசோக் காண்ட்ராக்டர் | - | 0.02% |
| | | | எம்.கே.பாலாஜி | 2.25% | - |
| 4. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் (Wet Mix Macadam) அமைத்தல். | 16.00 | வி.டி.பி அசோக் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | எம்.கே.பாலாஜி | 4.46% | - |
| 5. | வார்டு எண்.13–ல் உள்ள அங்கன்வாடி கட்டிட வளாகத்தில் சுற்றுச்சுவர் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல். | 10.00 | இதழினியா எண்டர்பிரைசஸ் | - | 0.01% |
| | | | L.புண்ணியகோட்டி | 3.78% | - |
| 6. | வார்டு எண்.18–ல் உள்ள பஜனை கோயில் 1வது தெரு மற்றும் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல். | 35.00 | SKV Facility Services | - | 0.02% |
| | | | இதழினியா எண்டர்பிரைசஸ் | 3.95% | - |
| 7. | வார்டு எண்.18–ல் உள்ள பள்ளிக்கூட 1வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல். | 19.00 | ஸ்ரீ குகன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.04% |
| | | | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | 2.14% | - |
| 8. | வார்டு எண்.18–ல் உள்ள பள்ளிக்கூட 1வது தெரு மழைநீர் வடிகால் அமைத்தல். | 22.00 | ஸ்ரீ குகன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.03% |
| | | | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | 2.56% | - |
| வ. எண் | | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
| | | | | அதிகம் | குறைவு |
| 9. | வார்டு எண்.22–ல் உள்ள காந்தி நகர் 2வது தெரு மழைநீர் வடிகால் மற்றும் கவர் சலாப் அமைத்தல். | 34.00 | ரா.சுதாகர் | - | 0.01% |
| | | | J. பிருந்தா | 3.12% | - |
| 10. | | 32.00 | ரா.சுதாகர் | - | 0.02% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வார்டு எண்.22–ல் உள்ள காந்தி நகர் 1வது தெரு மழைநீர் வடிகால் மற்றும் கவர் சலாப் அமைத்தல். | | எம்.கே.பாலாஜி | 2.16% | - |
| 11. | அருள் நகர் காமாட்சி நகர் சிறிய பாலம் இரு பக்கத்தில் அனுகு சாலை அமைத்தல். | 40.00 | செந்தூர் முருகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.02% |
| | | | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 2.19% | - |
| 12. | வார்டு எண்.21–ல் உள்ள லட்சுமி கார்டன் மழைநீர் வடிகால் மற்றும் கவர் சாலப் அமைத்தல். | 23.00 | கே.வெங்கடேசலு | - | 0.05% |
| | | | வித்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 3.88% | - |
| 13. | வார்டு எண்.3–ல் உள்ள ஜெயராம் நகர் பூங்காவில் கூடுதலாக விளையாட்டு உபகரணங்கள், மின் விளக்குகள் மற்றும் பசுமை செடிகள் அமைத்தல். | 7.00 | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | எம்.கே.பாலாஜி | 2.74% | - |
| 14. | வார்டு எண்.29–ல் உள்ள பத்மாவதி நகர் பூங்காவில் கூடுதலாக விளையாட்டு உபகரணங்கள், மின் விளக்குகள் மற்றும் பசுமை செடிகள் அமைத்தல். | 6.00 | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.02% |
| | | | எம்.கே.பாலாஜி | 2.98% | - |
| 15. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மராமத்து பணிகள், மழைநீர் வடிகால்வாய்க்கு கவர் சாலப், மீன் அங்காடி கழிவுநீர் தொட்டி, முதலமைச்சர் காலை உணவு சமையல் கூடத்தில் இருப்பு கேட் மற்றும் காமராஜபுரம் தொடக்கப்பள்ளியில் உள்ள நுழைவுவாயில் இருப்பு கேட் அமைத்தல் | 12.00 | எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | எம்.கே.பாலாஜி | 2.25% | - |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/ 2025/இ1**

**தீர்மானம் எண்.24 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.24**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் பொது நிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். , நாள்.09.01.2026–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 12.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ண பேருந்து நிலைய வளாகத்தில் சுற்றுச்சுவர் கிரில் அமைத்தல். | 14.00 | M/s.ஸ்ரீ குகன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.01% |
| | | | M/s.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | 4.16% | - |
| 2. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நகராட்சி நடுநிலைப்பள்ளி–கூடுவாஞ்சேரி பிரதான வளைவு மற்றும் முதல் தலத்தில் உள்ள வகுப்பறை பகுதியில் பாதுகாப்பு கிரில் அமைத்தல். | 4.00 | M/s.ஸ்ரீ குகன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.02% |
| | | | M/s.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | 3.12% | - |
| 3. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட நகராட்சி தொடக்கப்பள்ளி பிரதான வளைவு மற்றும் முதல் தலத்தில் உள்ள வகுப்பறை பகுதியில் பாதுகாப்பு கிரில் மற்றும் புதியதாக GALVANIZED SHED அமைத்தல். | 7.00 | M/s.ஸ்ரீ குகன் சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | - | 0.03% |
| | | | M/s.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | 3.82% | - |
| 4. | புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அனைத்து அறைகளிலும் புதிய இணையதள இணைப்பு பொருத்துதல் பணி. | 9.00 | M/s.மதினா எண்டர்பிரைசஸ் | - | 0.04% |
| | | | M/s.U3 சங்கர் & கோ | 2.43% | - |
| 5. | புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கண்காணிப்பு கோமர பொருத்துதல் பணி. | 12.00 | M/s.மதினா எண்டர்பிரைசஸ் | - | 0.02% |
| | | | M/s.U3 சங்கர் & கோ | 2.95% | - |
| 6. | நெல்லிக்குப்பம் சாலையில் உயர்கோபுர மின் விளக்குகளில் ஒளிரும் LED STRIP விளக்குகள் பொருத்தல் பணி. | 2.70 | M/s. ரமணி எண்டர்பிரைசஸ் | - | 0.01% |
| | | | M/s. Jayshun Associates | 3.95% | - |
| 7. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்திற்கு கணினி ALL IN ONE PC மற்றும் பிரிண்டர்கள் கொள்முதல் செய்தல். | 16.00 | M/s.ஆனந்த் எண்டர்பிரைசஸ் | - | 0.02% |
| | | | M/s. TS எண்டர்பிரைசஸ் | 3.24% | - |
| 8. | நகராட்சி நிர்வாக செங்கல்பட்டு மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு 15KVA UPS WITH BATTERIES கொள்முதல் செய்யும் பணி. | 7.00 | M/s. ரமணி எண்டர்பிரைசஸ் | - | 0.03% |
| | | | M/s. Jayshun Associates | 3.32% | - |
| 9. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குப்பட்ட நெல்லிக்குப்பம் சாலையில் உள்ள அறிவுசார் மையத்தில் புத்தகங்கள் கொள்முதல் செய்தல். | 3.85 | M/s. ரமணி எண்டர்பிரைசஸ் | - | 0.05% |
| | | | M/s. Jayshun Associates | 3.26% | - |
| 10. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட (விடுபட்ட) பகுதிகளில் 120 Watts LED விளக்குகள் மற்றும் 200Watts LED Flood Light கொள்முதல் செய்தல் பணி. | 20.00 | M/s.ஸ்ரீ ஸ்ரீனிவாச எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.04% |
| | | | M/s. Jayshun Associates | 3.95% | - |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/ 2025/இ1**

**தீர்மானம் எண்.25– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 25**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் கீழ்கண்ட பணிகள் பொது நிதி 2025 –2026 ஆம் ஆண்டின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.19–ல் உள்ள ராஜிவ் காந்தி நகரில் உள்ள அங்கன்வாடி அருகில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 5.00 |
| 2. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் அணைத்து தெருக்களில் குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 13.00 |
| 3. | வார்டு எண்.22–ல் உள்ள காந்தி நகர் 1வது மற்றும் காந்தி நகர் 2வது தெரு குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 13.00 |
| 4. | வார்டு எண்.11–ல் உள்ள நந்தீஸ்வரர் காலனி 1வது தெரு, 2வது தெரு மற்றும் 2வது தெரு குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 18.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தை குடிநீர் நிதி 2025–26–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 777/ 2025/இ1**

**தீர்மானம் எண்.26– மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண். 26**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் குடிநீர் நிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். , நாள்.09.01.2026–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 12.03.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.19–ல் உள்ள ராஜிவ் காந்தி நகரில் உள்ள அங்கன்வாடி அருகில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 5.00 | M/s. JPS Enterprises | - | 0.03% |
| | | | M/s. Kumaran Electricals | 2.69% | - |
| 2. | வார்டு எண்.18–ல் உள்ள நாராயணபுரம் அணைத்து தெருக்களில் குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 13.00 | M/s. JPS Enterprises | - | 0.04% |
| | | | M/s. Kumaran Electricals | 2.22% | - |
| 3. | வார்டு எண்.22–ல் உள்ள காந்தி நகர் 1வது மற்றும் காந்தி நகர் 2வது தெரு குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 13.00 | M/s. Kumaran Electricals | - | 0.04% |
| | | | M/s. JPS Enterprises | 2.22% | - |
| 4. | வார்டு எண்.11–ல் உள்ள நந்தீஸ்வரர் காலனி 1வது தெரு, 2வது தெரு மற்றும் 2வது தெரு குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 18.00 | M/s. JPS Enterprises | - | 0.04% |
| | | | M/s. JPS Enterprises | 2.14% | - |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/ 2025/இ1**

**தீர்மானம் எண்.27 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**நகர்மன்ற தலைவர் (பொறுப்பு)**
**நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி**